மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

அசல் வழக்கு எண். 55/2019

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் புதன் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி.P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இளையராஜா | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :நடேசன் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தழுதாழை | வயது | : 46/2025 |

**முதல் விசாரணை :**

1(i) நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு **Ex.X1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன். வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.